பாபு தையல் இயந்திரம் திருத்துமிடம்

0776906182


# தினப்புயல்

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06


கலையரசி நகைமாடம்

புதுக்குடியிருப்புச் சந்தி, புதுக்குடியிருப்பு.
T.P- 0770457661

மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் – 01

# விடுதலைப்புலிகளின் குற்றங்களை விசாரிக்கவேண்டும் என ஐ.நாவுக்கு கடிதம் அனுப்பவில்லை என்கிறார் எம்.எ.சுமந்திரன் (பா.உ)



கடந்த 2012 ஆம் ஆண்டிலிருந்து தமிழ் தேசியக் கூட்டமைப்பானது இலங்கையில் தமிழ் மக்கள் மீது அரசினால் மேற்கொள்ளப்பட்ட போர் குற்றங்களுக்கு நீதி கோரி உலக நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கைக்கு எதிராக ஒரு தீர்மானத்தை கொண்டு வந்திருக்கின்றோம். அது தமிழ் தேசியக் கூட்டமைப்பினால் எடுக்கப்பட்ட முயற்சியின் பயனாக கிடைத்தது. அது அனைவரும் அறிந்த விடயமாகும். ஆனால் தற்பொழுது புலிகளால் மேற்கொள்ளப்பட்ட குற்றங்களையும் விசாரிக்கக் கோரி சம்பந்தனால் ஒரு ஆவணம் அனுப்பப்பட்டதாக....

(03ஆம் பக்கம் பார்க்க...)

## இந்தியா - இங்கிலாந்து அணிகளின் டெஸ்ட் போட்டி ரத்து



இங்கிலாந்து சென்றுள்ள இந்திய அணி. ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. நான்கு டெஸ்ட் முடிவில் இரண்டில் வென்ற இந்தியா. 2-1 என தொடரில் முன்னிலை வகிக்கிறது.

இந்நிலையில். இந்திய அணி பயிற்சியாளர் ரவி சாஸ்திரிக்கு கொரோனா உறுதியானது. அவருடன் தொடர்பில் இருந்த பயிற்சியாளர் பாரத் அருண் மற்றும் பீல்டிங் பயிற்சியாளர் ஸ்ரீதருக்கும் கொரோனா உறுதியானது. இதனால். அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டனர். இந்திய வீரர்களுக்கு நடத்தப்பட்ட பரிசோதனையில்...

(03ஆம் பக்கம் பார்க்க...)



நாட்டில் எதிர்வரும் 13 ஆம் திகதி வரை அமுல்படுத்தப்பட்டிருந்த தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம், மேலும் எதிர்வரும் 21ஆம் திகதி அதிகாலை 4.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது.



பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, இத்தாலிக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு, நேற்று காலை நாட்டிலிருந்து பயணமானார். இத்தாலியினுடைய போலோக்னா பல்கலைக்கழகத்தில் இடம்பெறவுள்ள மாநாட்டில் சிறப்பு உரையாற்றுவதும், இராஜதந்திர சந்திப்புகளை அடிப்படையாகக் கொண்டதாக பிரதமரின் இத்தாலி விஜயம் அமைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்சவினால் 2019ஆம் ஆண்டு 15ஆவது மத்திய வங்கியின் ஆளுநராக நியமிக்கப்பட்ட, டபிள்யூ.டி.லக்ஷ்மன் அவர்கள் எதிர்வரும் 14ஆம் திகதியுடன் தனது பதவியிலிருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்துள்ளார்.

## பிணங்களின் மேல் நின்று ஆட்சி செய்யும் கோட்டா அரசு – இறுகும் சீனாவின் கழுத்துப்பிடி

இலங்கையில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரசின் தாக்கத்தை அடுத்து கடனிலிருந்து மீள முடியாத நிலையில் மீண்டும் மக்களை வறுமைக்கோட்டுக்குள் தள்ளுகின்றதொரு நிலைக்குத் தற்போதைய அரசு மாறியுள்ளது. இதனை ஒரு சாட்டாகவைத்து கடனுக்குமேல் கடனை சீன அரசாங்கம் இலங்கைக்கு வழங்கி வருகிறது. 65.1 பில்லியன் வரையில் இதுவரையில் சீன அரசாங்கம்...

(03 ஆம் பக்கம் பார்க்க...)

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல : 154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## குடும்ப ஆட்சியை மக்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்

இலங்கையினது அரசியலைப் பொறுத்தவரையில் ஆட்சியாளர்கள் தங்களது அதிகாரங்களைப் பயன்படுத்தி குடும்ப உறுப்பினர்களை அரசியலுக்கு இழுத்து வந்து பொறுப்பான பதவிகளில் அமர்த்துவது என்கிற விடயத்திற்கு பெயர் குறிப்பிட்டுக் கூறக்குடியவராக இன்றும் திகழ்பவர் முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய பிரதமருமான மஹிந்த ராஜபக்ச அவர்கள் தான். கடந்த காலங்களில் அவர் இந்நாட்டில் ஜனாதிபதியாக இருந்த போது தனது சகோதரர்களை நெருங்கிய உறவுகளை. மனைவியின் உறவினர்களை என அரசின் முக்கிய பதவிகளில் நியமித்திருந்தார். தான் ஆட்சியில் இருக்கும் காலப்பகுதியிலேயே தத்தமது குடும்ப உறுப்பினர்கள் இந்நாட்டில் அவர்களது பரம்பரையினருக்குத் தேவையான சொத்துக்களையும் பணத்தையும் சேகரித்துக்கொள்ள இது ஏதுவாக அமைந்தது. மஹிந்த அவர்களின் இச்செயற்பாட்டினால் வெறுப்படைந்த நாட்டு மக்கள் குடும்ப ஆட்சிக்கு முடிவுகட்ட எண்ணியே ஆட்சிமாற்றத்தைக் கொணர்ந்தனர். இது அவருக்கும் நன்கு தெரியும்.

இவ்வாறிருக்க. தற்போது மஹிந்த ராஜபக்ச அவர்களது சகோதரர் கோட்டபாய ராஜபக்ச ஜனாதிபதி பதவியில் இருக்கும் நிலையில். மீண்டும் குடும்ப ஆட்சி இலங்கையில் தலைதூக்கியுள்ளது. இதற்காகவா இந்நாட்டு மக்கள் உங்களது கைகளில் ஆட்சியைத் தந்தார்கள். நீங்கள் மார்தட்டிக் கூறுகின்ற அதே சிங்கள பெரும்பான்மை மக்கள் இன்று உங்களது ஆட்சி தொடர்பில் அதிருப்தியடைந்திருக்கிறார்கள். பௌத்த தேரர்கள் எச்சரிக்கை விடுக்கின்றனர் அரசுக்கு. குடும்பப் பின்னணியின் காரணமாகவே கட்சிக்குள் பிரச்சினைகள் எழ ஆரம்பித்துள்ளன.

குடும்ப ஆட்சியினை மக்கள் விரும்புபவர்கள் அல்ல என்கிற விடயம் உங்களுக்கு நன்கு தெரிந்தும் கண்மூடித்தனமான முறையில் செயற்படுவதால் பயன் இல்லை.

## முதலாவது போட்டியில் தென்னாபிரிக்கா வெற்றி




**இலங்கை மற்றும் தென் ஆபிரிக்க அணிகளுக்கிடையிலான முதலாவது இருபதுக்கு 20 கிரிக்கெட் போட்டியில் தென் ஆபிரிக்க அணி 28 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது. போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற தென் ஆபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.**

**இதற்கமைய, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 05 விக்கெட்டுக்களை இழந்த தென் ஆபிரிக்க அணி 163 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. அணி சார்பில் எய்டன் மார்க்ரம் 01 பவுண்டரி, 02 சிக்ஸர்கள் அடங்கலாக 48 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார். பந்துவீச்சில் இலங்கை அணியின் வனிந்து ஹசரங்க 23 ஓட்டங்களை கொடுத்து 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.**

**இந்நிலையில், 164 என்ற வெற்றியிலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 20 ஓவர்கள் நிறைவில் 06 விக்கெட்டுக்களை இழந்து 135 ஓட்டங்களை மாத்திரமே பெற்று தோல்வியை தழுவியது. அணி சார்பில் தினேஷ் சந்திமால் 5 பவுண்டரிகள் 2 சிக்ஸர்கள் அடங்களாக 66 ஓட்டங்களை அதிகபடியாக பெற்றுக்கொடுத்தார். பந்துவீச்சில் தென் ஆபிரிக்க அணியின் கேஷவ் மஹராஜ் 19 ஓட்டங்களை கொடுத்து 01 விக்கெட்டை கைப்பற்றினார்.**

**நாட்டில் மேலும் 131 கொவிட் மரணங்கள் நேற்று (10.09.2021) பதிவாகியுள்ளன. இதற்கமைய நாட்டில் பதிவாகியுள்ள கொவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 10,995 ஆக அதிகரித்துள்ளது. உயிரிழந்தோரில் 73 ஆண்களும், 58 பெண்களும் அடங்குகின்றனர். அத்துடன் இன்று 2842 பேருக்கு கொவிட் தொற்று உறுதியாகியுள்ளது. இதற்கமைய இதுவரை அடையாளம் காணப்பட்ட கொவிட் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 480,478 ஆக அதிகரித்துள்ளது.**

## நாட்டின் 95.8%ஆனோரின் தொற்றுக்கு டெல்டா திரிபே காரணம்




இலங்கையில் 95.8%ஆன கொவிட்-19 தொற்றாளர்களுக்கு ஏற்பட்டிருப்பது டெல்டா திரிபு என, ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, நோயெதிர்ப்பு மற்றும் கல உயிரியல் பிரிவினால் **(AICBU)** வெளியிடப்பட்டுள்ள ஆய்வறிக்கையில், இலங்கையின் பல்வேறு மாகாணங்களில் வெவ்வேறு **SARS-CoV-2** திரிபுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் இதனை கண்டறிந்துள்ளனர்.

கொவிட்-19 ஐ கட்டுப்படுத்துவது தொடர்பான பொருத்தமான கொள்கை முடிவுகளை எடுப்பதற்காக, இலங்கையின் பல்வேறு மாகாணங்களில் வெவ்வேறு **SARS-CoV-2** திரிபுகளின் மாற்றத்தை கண்டறிவது அவசியமென்பதன் அடிப்படையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக, அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேராசிரியர் நீலிகா மலவிகே, வைத்தியர் சந்திம ஜீவந்தர உள்ளிட்ட ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழக **(USJ)** ஆராய்ச்சியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட குறித்த ஆய்வில், ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் நோயெதிர்ப்பு மூலக்கூறு மற்றும் மூலக்கூற்று மருத்துவப் பிரிவின் ஒவ்வாமை, நோயெதிர்ப்பு மற்றும் கல உயிரியல் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட குறித்த ஆய்வு, 95.8%ஆனோருக்கான தொற்றுக்கு காரணம் டெல்டா திரிபே **(Delta variant)** என்பதைக் காட்டியுள்ளதாக அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன், இலங்கையில் டெல்டா தொற்று பரவலானது, பல்வேறு மாகாணங்களில் 84% முதல் 100% வரை இருப்பதாக அதில் கண்டறியப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விடுதலைப்புலிகளின் குற்றங்களை...

இலங்கை தமிழரசுக் கட்சிக்கு எதிராக ஒரு விஷமப் பிரச்சாரம் மேற்கொள்ளப்படுகிறது. அது முற்றிலும் ஒரு பொய்யான விடயம்.

இந்த விடயத்தில் ஊடகங்களும் பொறுப்புணர்வோடு செயற்பட வேண்டும். அதாவது ஒரு விடயத்தை செய்தியாக பிரசுரிக்கும் போது அதனை ஆராய்ந்த பின் செய்தியாக பிரசுரிக்க வேண்டும். தமிழரசுக்கட்சி தனியாகச் செயற்படப்போகின்றது. கூட்டமைப்பிலிருந்து பிரிந்து செயற்படுகிறது என தற்பொழுது குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது. அவ்வாறான ஒரு சம்பவம் இடம்பெறாது. எந்த காலத்திலும் இலங்கை தமிழரசுக் கட்சியானது தமிழ் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளுடன் இணைந்து செயற்படுமே தவிர ஒருபோதும் தனித்து செயற்படுவதற்கு தயாராக இல்லை. அதே போல எந்தளவுக்கு இணைந்து செயல்பட முடியுமோ அந்தளவுக்கு இணைந்து செயற்படுகின்றோம்.

அத்தோடு தமிழ் தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகள் எம்முடன் நல்ல உறவாக உள்ளார்கள். அவர்களும் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இணைந்து செயற்படுகின்றோம் என கூறுகின்றார்கள். நாங்கள் தமிழ் தேசிய கூட்டமைப்பில் ஒற்றுமையாக செயற்படுகின்றோம். எனினும் கூட்டாகச் செயற்படும் போது பல பிரச்சினைகள் முரண்பாடுகள் ஏற்படும். ஆனால் தமிழ் மக்களுக்காக பயணிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராகிய நாங்கள் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் பிரிந்தோ அல்லது தனித்தோ செயற்படவில்லை என. இலங்கை தமிழரசுக் கட்சியின் யாழ் மாவட்ட அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

## பிணங்களின் மேல் நின்று...

வழங்கியுள்ளது. இதனைவிடவும் துறைமுக அபிவிருத்திகள். பாதை புனரமைப்பு போன்றவற்றிற்கும் அரசாங்கம் கடனைப் பெற்றுள்ளது. அதனைவிடவும் தற்போதைய நிலையில் 4000 கோடி நாணயம் அச்சிடப்பட்டுள்ளது. பணவீக்கம் அதிகரிக்கும் நிலை காணப்படுகிறது. இலங்கை மத்திய வங்கி 1000 கோடி ரூபா பெறுமதியான நாணயத் தாளை அச்சிட்டது. திறைசேரி உண்டியலுக்கான ஏலத்தை முகாமை த்துவம் செய்ய முடியாமல் போனமையினால் 39.97 பில்லியன் ரூபா பணத்தை ஏற்கனவே அச்சிட்டது.

மத்திய வங்கியினால் செப்டம்பர் 01ம் திகதி 68.05 பில்லியன் பெறுமதியான உண்டியல் ஏலத்திற்கு விற்கப்பட்டது. 12 மாத கால எல்லைக்குள் 5.97 வீத நிரண்ய விலையில் 43.24 பில்லியன் பெறுமதியான உண்டியல்களை விற்க முடியாமல் போனது. ஆகையால் இதனை ஈடுசெய்யும் பொருட்டு புதிய நாணயத்தாள்கள் அச்சி டப்பட்டுள்ளது. அதேவேளை செப்டம்பர் 02 ஆம் திகதி 1221 பில்லியன் ரூபாவாக உண்டியலின் மொத்த இருப்பு இருந்த போதிலும் அதற்கு மறுநாள் 1261 ஆக அதிகரித்துள்ளதாக புள்ளி விபரவியல் சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்வாறான நிலையில் ஒரு நாட்டில் பொருளாதார வீழ்ச்சியும். நாணயத்தின் வீழ்ச்சியும் ஏற்படு கின்ற சரிசமமான நேரம் இந்த நாடு சோமாலியாவை விட மிக மோசமான நிலைக்குக் தள்ளப்படும்.

தற்போது இறக்குமதிகளை இலங்கையரசு நிறுத்தியுள்ளது. இதில் மொத்த வியாபாரிகள் பாதிக்கப்படுவதுடன் இலங்கை நாடானது ஒரு தன்னிறைவு கொண்ட பொருளாதார நாடாக திகழ முடியாமல் அனைத்து விடயங்களிலும் பின்தங்கிய நிலை இந் நாட்டில் உருவாகும். எனவே தொடர்ந்தும் அரசு பிணங்களின் மேல் நின்று ஆட்சி செய்யும் நிலையே உருவாகும். இதனால் பணவீக்கம் அதிகரிக்கும் அபாயம் நாட்டில் உருவாகும்.

## இந்தியா – இங்கிலாந்து டெஸ்ட்...

யாருக்கும் எந்த பாதிப்பும் இல்லை. மான்செஸ்டரில் 5வது போட்டியில் பங்கேற்க சென்ற இந்திய அணியில், ஊழியர் ஒருவருக்கு கொரோனா உறுதியானது. இதனால், மதியத்திற்கு மேல் வீரர்கள் பயிற்சியில் ஈடுபடவில்லை. மேலும், நேற்றைய போட்டியில் பங்கேற்க இந்திய அணி வீரர்கள் தயக்கம் காட்டினர்.

இது குறித்து பிசிசிஐக்கு கடிதம் எழுதினர். இதனை தொடர்ந்து, பிசிசிஐ மற்றும் இங்கிலாந்து கிரிக்கெட் வாரிய அதிகாரிகள் பேச்சு வார்த்தை நடத்தினர். இதன் முடிவில் 5வது போட்டியை ரத்து செய்வது என முடிவு செய்யப்பட்டது. இதனை இங்கிலாந்து கிரிக்கெட் வாரியம் உறுதி செய்தது. இந்திய தரப்பில் சிலருக்கு கொரோனா உறுதியானதால், அச்சம் காரணமாக வீரர்களை இந்திய அணியினால் களமிறக்க முடியவில்லை என இங்கிலாந்து கிரிக்கெட் வாரியம் தெரிவித்துள்ளது.

## இந்த காலத்தில் நீரிழிவு, உயர்குருதி அமுக்கம், சுவாச – இருதய நோய்களை கட்டுப்பாட்டில் வைத்திருப்பது அவசியமாகும்



கொரோனா மூன்றாவது அலையில் கிழக்கு மாகாணத்தில் இதுவரை 42784 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் 772 மரணங்களும் ஏற்பட்டுள்ளன. 2 தடுப்பூசிகளை பெற்றவர்களுக்கு டெல்டா திரிபின் தாக்கம் குறைவாக உள்ளதை எம்மால் அவதானிக்க கூடியதாக உள்ளது. ஆகவே தடுப்பூசிகளை நீங்கள் பெற்றுக்கொண்டாலும் இத்தாக்கங்களில் இருந்து பாதுகாக்க சில நாட்கள் செல்லும் என கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஏ.ஆர்.எம். தௌபீக் தெரிவித்தார்.

நேற்று (10) கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். மேலும் அங்கு கருத்து தெரிவிக்கும் போது கிழக்கு மாகாணத்தில் உள்ள 4 பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைகளில் கொரோனா வைரஸின் பிறழ்வு வகை டெல்டா வகை திரிபு பரவலாக அதிகரித்துள்ளமை தொடர்பில் ஆய்வு கூட அறிக்கைகள் எமக்கு கிடைக்கப்பெற்றுள்ளன. கொரோனா மூன்றாவது அலையில் மொத்தமாக 42784 நோயாளர்களும் 772 மரணங்களும் ஏற்பட்டுள்ளன. இதனால் ஆகஸ்ட் மாத மூன்றாம் நான்காம் வாரங்களில் நோயாளர்களின் எண்ணிக்கையும் மரணங்களின் எண்ணிக்கையும் அதிகரித்து காணப்பட்டிருந்தது. எனினும் செப்டம்பர் மாதத்தில் நோயாளர்களின் எண்ணிக்கை சற்று குறைவடைந்து.

அது எமக்கு ஆறுதலாக இருந்தாலும் இது மேலும் இவ்வாறு குறைவடைய செய்வது பொதுமக்களின் அன்றாட வாழக்கையிலும் இரண்டு தடுப்பூசிகளை பெறுவதிலும் ஏனைய தொற்றா நோய்களான நீரிழிவு நோய் உயர்குருதி அமுக்கம் ஏனைய சுவாச இருதய நோய்கள் இவற்றை கட்டுப்பாட்டில் வைத்திருப்பது மிகவும் அவசியமாகும். இந்நோய்கள் இருப்பவர்களும் தடுப்பூசி முற்றாக பெறாதவர்களும் 60 வயதிற்கும் மேற்பட்டவர்களுமே அதிகமாக மரணத்தை தழுவியுள்ளனர். கிழக்கு மாகாணத்தில் எமக்கு போதுமான வகையில் தடுப்பூசிகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அதனால் தடுப்பூசியை இதுவரை பெறாதவர்கள் அவர்களது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு சென்று தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ள முடியும்.

எமக்கு தேவையான முழு தடுப்பூசிகளையும் அரசாங்கம் வழங்கி கொண்டிருக்கின்றது. மேலும் இப்பிராந்தியத்தில் உள்ள 20 வயது முதல் 30 வயது வரையானவர்களுக்கும் தடுப்பூசி வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனவே அரசாங்கம் தற்போது அமுல்படுத்தியுள்ள சட்டதிட்டங்களை மக்களாகிய நீங்கள் அலட்சியம் செய்யாமல் தங்களது நலனில் ஒவ்வொரும் அக்கறை எடுக்க வேண்டும். டெல்டா திரிபு என்பதை பற்றி பயப்பட வேண்டாம். ஏனெனில் 2 தடுப்பூசிகளை பெற்றவர்களுக்கு இதன் தாக்கம் குறைவாக உள்ளதை எம்மால் அவதானிக்க கூடியதாக உள்ளது. ஆகவே தேவையற்ற ஒன்று கூடல்களை தவிருங்கள். முகக்கவசங்களை நேர்த்தியாக அணியுங்கள். சமூக இடைவெளிகளை பின்பற்றி கொள்ளுங்கள். மேலும் செப்டம்பர் இறுதி பகுதியில் எமது பகுதியில் இந்நோய் தாக்கம் மேலும் மேலும் குறைவடைந்து செல்லும் என்பதை எதிர்பார்க்கின்றோம் என்றார்.

(நூருல் ஹுதா உமர்)

# காபூலில் இருந்து பறந்த முதல் சர்வதேச விமானம்




தலிபான்களின் கட்டுப்பாட்டிற்குள் காபூல் விமான நிலையம் வந்தபின், கத்தார் அரசின் உதவியுடன் விமானங்களை இயக்கும் பணிகளை தலிபான் அரசு முடுக்கி விட்டது. ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கப் படைகள் வெளியேறியதை தொடர்ந்து தாலிபான் பயங்கரவாதிகள் கடந்த மாதம் 15ம் திகதி ஒட்டுமொத்த ஆப்கானிஸ்தானையும் கைப்பற்றினர். இதனால் அதிபர் அஷ்ரப் கனி நாட்டை விட்டு தப்பி ஓடினார்.

இதையடுத்து ஆட்சி அதிகாரம் தங்கள் வசமானதாக அறிவித்த தலிபான்கள், விரைவில் புதிய அரசு அமையும் என தெரிவித்தனர். இந்தப் புதிய அரசில் தலிபான் பயங்கரவாத அமைப்பை நிறுவியவர்களில் ஒருவரும், அந்த அமைப்பின் தற்போதைய தலைவருமான முல்லா அப்துல் கனி பரதருக்கு அதிபர் பதவி வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்கப்படை பின்வாங்கப்பட்டதை அடுத்து காபூல் விமான நிலையத்தை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த அமெரிக்க ராணுவம் முழுவதும் ஓகஸ்ட் 30ம் திகதி இரவு நாடு திரும்பியது. இதையடுத்து, தலிபான்களின் கட்டுப்பாட்டிற்குள் காபூல் விமான நிலையம் வந்தது. அதன்பின், கத்தார் அரசின் உதவியுடன் விமானங்களை இயக்கும் பணிகளை தலிபான் அரசு முடுக்கி விட்டது. இந்நிலையில், ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் இருந்து கத்தாருக்கு முதல் சர்வதேச விமானம் கிளம்பியதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்த விமானத்தில் அமெரிக்கர்கள் உட்பட 200 பேர் பயணம் செய்தனர். சர்வதேச விமான சேவை தொடங்கப்பட்ட நிலையில், எதிர்வரும் நாட்களில் ஆப்கானிஸ்தானில் சிக்கியிருக்கும் தங்கள் நாட்டு மக்களை சர்வதேச நாடுகள் மீட்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# பிரான்சின் அதிரடி அறிவிப்பு

உலகம் முழுவதும் பெண்கள் முன்னேறுவதற்காக அவர்களுக்கு சில சலுகைகள் அளிக்கப்பட்டு வரும் நிலையில், பிரான்ஸ் நாட்டில் தற்போது வெளியாகியிருக்கும் ஒரு அறிவிப்பு பேசு பொருளாக மாறியுள்ளது.

பிரான்ஸில் 2022 ஜனவரி 1 முதல் 25 வயது வரையிலான பெண்களுக்கு கருத்தடை இலவசம் என சுகாதாரத்துறை அமைச்சர் ஒலிவியர் வேரன் **(Olivier Veran)** அறிவித்துள்ளார். 2022 தேர்தல் பிரச்சாரத்திற்கு ஜனாதிபதி இம்மானுவேல் மேக்ரோனின் அரசாங்கம் தயாராகி வரும் நிலையில், இந்த கொள்கை அறிவிப்பு வெளியாகி இருக்கிறது.

இந்த புதிய நடவடிக்கையின் மூலம் அரசாங்கத்திற்கு ஆண்டுக்கு 21 மில்லியன் யூரோ செலவாகும் என **Olivier Veran** குறிப்பிட்டுள்ளார். சில இளம் பெண்களிடையே கருத்தடை பயன்பாடு குறைந்து வருகிறது.

அதற்கு முக்கிய காரணம் நிதி என்று தெரிவித்தார். மேலும், “பெண்கள் தங்களை பாதுகாத்துக் கொள்ள முடியாது என்பது தாங்கிக்கொள்ள இயலாத ஒன்று.

அதிக செலவாகும் என்பதால் அவர்கள் விரும்பினால் கூட கருத்தடை செய்ய முடியாத நிலை இருக்கிறது” என **Olivier Veran** கூறினார். பிரான்சில் இப்போது வரை கருத்தடைக்கான இலவச அணுகலுக்கான வயது வரம்பு 18 என்பது குறிப்பிடத்தக்கது.



# எம்மா இறுதிச்சுற்றுக்குத் தகுதி



பிரித்தானிய இளவரசர் வில்லியம், அவரது மனைவி கேட், பிரித்தானிய பிரதமர் போரிஸ் ஜோன்சன் என பல பிரபலங்களின் பாராட்டுக்களைப் பெற்று ஒரே நாளில் தலைப்புச் செய்தியாகியிருக்கிறார் ஒரு இளம்பெண். அவரது பெயர் எம்மா ரடுக்கானு **(Emma Raducanu 18).**

எம்மா, கனடாவின் ரொரன்றோவில் பிறந்தவர். எம்மாவின் தந்தை **Ian** ரொமேனிய வம்சாவளியையும், தாய் **Renee** சீன வம்சாவளியையும் சேர்ந்தவர்கள். எம்மாவுக்கு இரண்டு வயது இருக்கும்போது அவரது குடும்பம் இங்கிலாந்துக்கு குடிபெயர்ந்தது. ஐந்து வயதில் டென்னிஸ் பேட் பிடித்திருக்கிறார். தற்போது, வரலாற்றிலேயே முதல் முறையாக ஒரு 18 வயது பெண் அமெரிக்க ஓப்பன் கிராண்ட் ஸ்லாம் டென்னிஸ் போட்டியின் இறுதிச் சுற்றுக்கு தகுதி பெற்றிருக்கிறார் என்றால், அது எம்மாதான்.